**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**அனுப்புநர்**

**திருமதி. ஆ. கல்பனா,**
**மேயர்,**
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர் -641 001

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்,
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
மண்டல உதவி ஆணையாளர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

பாராளுமன்ற உறுப்பினர்கள்,
(கோயம்புத்தூர் மற்றும்
பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

சட்டமன்ற உறுப்பினர்கள்,
(கவுண்டம்பாளையம், கோயம்புத்தூர்
வடக்கு, தொண்டாமுத்தூர்,
கோயம்புத்தூர் தெற்கு,
சிங்காநல்லூர் மற்றும்
கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்).

**ந.க.எண் : 4452/ 2022 / எம்சி. 8 நாள் 22.08.2022**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்றக் கூட்டம் நடைபெறுதல்- நிகழ்ச்சி நிரல் அனுப்புதல்– தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் **மாமன்ற சாதாரணக் கூட்டம் 29.08.2022 ஆம் தேதி திங்கள் கிழமை காலை 10.30 மணிக்கு** மாண்புமிகு மேயர் அவர்கள் தலைமையில் **மாநகராட்சி பிரதான அலுவலக வளாகத்தில் உள்ள விக்டோரியா ஹால் கூட்ட அரங்கத்தில்** நடைபெற உள்ளது.

மேற்படி கூட்டத்தில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

இணைப்பு : கூட்டப்பொருள்கள்

**(ஒப்பம்) மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**/ உத்திரவின்படி அனுப்பப்படுகிறது/**

22/08/22

**மாமன்றச் செயலாளர்,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**நகல் :**

துணை ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் , கோயம்புத்தூர் மாநகராட்சி

**அ) திருக்குறள்**

கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

**குறள் - 981**

**விளக்கம்**

தகுந்தவை எவை என்று அறிந்து, பண்பார்ந்த முறையில் செயல் ஆற்றுபவர்களுக்கு நல் முயற்சிகள் எல்லாம் கடமையாக அமையும்.

**திருவள்ளுவர்.**

---

**ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

**சிறப்புத் தீர்மானம் எண் 1**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொற்கரங்களால் கடந்த 24.08.2022 அன்று கோவை மாநகராட்சி பகுதியில் 13,809 பயனாளிகள் உட்பட தமிழகத்திலேயே அதிக எண்ணிக்கையிலான 1,07,410 பயனாளிகளுக்கு ரூ.588.198 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கியும், மாநகராட்சியில் 334 புதிய பணிகள் ரூ.134.08 கோடி மதிப்பீட்டில் துவக்கி வைத்தும், மாநகராட்சியில் ரூ. 57.05 கோடி மதிப்பீட்டில் 18 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தும் கோயம்புத்தூர் மாநகராட்சி / மாவட்ட வளர்ச்சிக்காக என்றென்றும் துணை நிற்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கோவை மாநகர மக்கள் சார்பாக நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்ளும் சிறப்புத் தீர்மானம் மாண்புமிகு மேயர் ஆ. கல்பனா அவர்களால் முன்மொழியப்பட்டு, வடக்கு மண்டல தலைவர் திரு வே. கதிர்வேல் அவர்களால் வழிமொழியப்பட்டது.

**சிறப்புத் தீர்மானம் எண் 1 நாள் 29.08.2022**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**சிறப்புத்தீர்மானம் எண் 2**

தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 அரசாணை (நிலை) எண் 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019-இன்படி, 3000 சதுர மீட்டர் பரப்பளவிற்குள் அமையும் மனைப்பிரிவிற்கு பொது ஒதுக்கீடு இடம் ஒதுக்கீடு செய்யத் தேவையில்லை எனவும், 3000 சதுர மீட்டர் முதல் 10000 சதுர மீட்டர் பரப்பளவிற்குள் அமையும் மனைப்பிரிவிற்கு 10% பொது ஒதுக்கீடு இடம் அல்லது அதற்கு ஈடான அரசு வழிகாட்டி நிலமதிப்பில் அடிப்படையில் தொகையினை செலுத்திக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுளளது.

பொது ஒதுக்கீடு இடத்திற்கு பதிலாக தொகை செலுத்தப்படும் காரணத்தால், மாநகராட்சிக்கு பொது ஒதுக்கீடு இடங்கள் இல்லாமல் நகர் அபிவிருத்திக்கு இடம் இல்லாமல் நகரத்திற்கான குடிநீர், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம். உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தி பாதிக்கப்படுகிறது. ஆகவே, அனைத்து மனைப்பிரிவிற்கும் 10 சதவீதம் பொது ஒதுக்கீடு இடம் ஒதுக்கீடு செய்ய ஆவன செய்யக் கோரி அரசுக்கு கருத்துரு அனுப்பவேண்டும் என்ற சிறப்புத் தீர்மானம் நகரமைப்புக்குழுத் தலைவர் திரு த. சந்தோஷ் அவர்களால் முன்மொழியப்பட்டு 100-ஆவது மாமன்ற உறுப்பினர் திரு கார்த்திகேயன் அவர்களால் வழிமொழியப்பட்டது.

**சிறப்புத் தீர்மானம் எண் 2 நாள் 29.08.2022**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**சிறப்புத்தீர்மானம் எண் 3**

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள இடங்களுக்கு உண்டான நில அளவை ஆவணங்கள் தற்போது வட்டாட்சியர் மற்றும் உதவி இயக்குநர், நில அளவை பதிவேடு துறை ஆகியோர் வசமே உள்ளது. இதனால் மாநகராட்சியில் கட்டிட அனுமதி போன்ற ஆவணங்களை பெற பொது மக்கள் பெரும் அவதிக்கு உள்ளாகின்றனர்.

எனவே பொதுமக்களுக்கு எளிதில், ஓரிடத்திலேயே நில அளவை ஆவணங்களை பெற வசதியாக, மாநகராட்சி வசமே ஒப்படைப்பு செய்து தர அரசை கேட்டுக்கொள்ளலாம். மேலும் அனைத்து நில அளவை ஆவணங்களும் கணினிமயமாக்கப்பட்டு நில பரிவர்த்தனை செய்தவுடன் கணினி மூலம் உடனுக்குடன் மாற்றம் செய்யும் நிலையை உருவாக்கித்தர அரசுக்கு பரிந்துரை செய்யவேண்டும் என்ற சிறப்புத் தீர்மானம் நகரமைப்புக் குழு தலைவர் திரு த. சந்தோஷ் அவர்களால் முன்மொழியப்பட்டு 20 ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. அ. மரியராஜ் அவர்களால் வழிமொழியப்பட்டது.

**<u>சிறப்புத் தீர்மானம் எண் 3 நாள் 29.08.2022</u>**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

---

**சிறப்புத்தீர்மானம் எண் 4**

கோயம்புத்தூர் மாநகராட்சியில் நில அளவை பணிகள் தற்சமயம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து மாற்றுப்பணி அடிப்படையில் நியமிக்கப்பட்ட நில அளவையர்களை வைத்தே மேற்கொள்ளப்படுகிறது. மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் அரசு நிலங்கள் மற்றும் தனியார் நிலங்கள் ஆக்கிரமிப்பு மற்றும் மனைப்பிரிவுகளுக்கான பொது ஒதுக்கீடு நிலங்கள் ஆகியவற்றை அளவீடு செய்யும் பணிகள் அதிக அளவில் உள்ளன.

எனவே, மாநகராட்சிக்கென தனியாக மண்டலத்திற்கு ஒரு நகர அளவையர் வீதம் ஐந்து எண்ணிக்கையிலான நகர அளவையர்களையும், அவர்களுக்கு களப்பணிகளில் உதவி புரிய மண்டலத்திற்கு இருவர் வீதம் பத்து கள உதவியாளர்களையும் தனியாக நியமிக்க அரசுக்கு பரிந்துரைக்க வேண்டும் என்ற சிறப்பு தீர்மானம் நகரமைப்புக்குழுத் தலைவர் திரு த. சந்தோஷ் அவர்களால் முன்மொழியப்பட்டு 100 ஆவது மாமன்ற உறுப்பினர் திரு கார்த்திகேயன் அவர்களால் வழிமொழியப்பட்டது.

**<u>சிறப்புத் தீர்மானம் எண் 4 நாள் 29.08.2022</u>**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

---

**30.07.2022 ஆம் தேதி நடைபெற்ற மாமன்ற சாதாரணக் கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு மீண்டும் சமர்ப்பிக்கப்படுகிறது.**

## பொருள் எண் 1

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - 2022-23 முதல் 2024-25ம் ஆண்டிற்க்கான வருடாந்திர குத்தகை இனங்கள் - 27.06.2022 அன்று பொது ஏலம் , மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கை ஏற்று ஒப்படைப்பு செய்வது – தொடர்பாக.

பார்வை : வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுக் கூட்ட தீர்மான எண்.44, நாள்.18.07.2022.

------------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் சார்ந்த 2022-23 முதல் 2024-25ம் ஆண்டிற்கான கீழ்க்கண்ட குத்தகை இனங்களுக்கு 27.06.2022 அன்று பொது ஏலம், மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

குத்தகை இனங்களின் விவரம்

| வ. எண். | பழைய வார்டு எண் | புதிய வார்டு எண் | குத்தகை இனத்தின் விபரம் |
|---|---|---|---|
| 1. | 82 | 82 | உக்கடம் பேருந்து நிலையத்தில், வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 2. | 54 | 67 | காந்திபுரம் நகர பேருந்து நிலையத்தில், வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 3. | 55 | 48 | பி.என்.பாளையம் - கட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 4. | 52 | 48 | சக்தி ரோடு, ஆம்னி பேருந்து நிலையம் - கட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம். |
| 5. | 85 | 80 | செட்டி வீதி – கட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம். |
| 6. | 83 | 81 | தியாகி குமரன் மார்க்கெட் - கட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம். |
| 7. | 82 | 82 | உக்கடம் பேருந்து நிலையம் - கட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம். |
| 8. | 72 | 83 | வ.உ.சி.பார்க் - கட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம். |

மேற்கண்ட இனங்களில் வரிசை எண். 1-ல் குறிப்பிட்டுள்ள குத்தகை இனத்திற்கு பொது ஏலம் / மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள ஒருவரும் முன்வரவில்லை. வரிசை எண். 2,3,4,5,6,7 மற்றும் 8-ல் குறிப்பிட்டுள்ள குத்தகை இனங்களுக்கு கீழ்கண்டவாறு ஏலக்கோரிக்கைகள் ஏலதாரர்களால் கோரப்பட்டுள்ளது.

| வ. எண். | குத்தகை இனத்தின் விபரம் | அரசு மதிப்பு ரூ. | துறை மூலம் வசூல் செய்யப்படும் தொகை ஓராண்டுக்கு ரூ. | உயர்ந்த பட்ச மின் ஏல கேள்வி தொகை ரூ. | உயர்ந்த பட்ச பொது ஏல கேள்வி தொகை ரூ. | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1. | காந்திபுரம் நகர பேருந்து நிலையத்தில், வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 5,29,200/- | 5,47,500/- | - | 5,30,000/- | - |
| 2. | பி.என்.பாளையம் கட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 3,50,000/- | 36,500/- | - | 2,01,000/- | 2,00,000/- |
| 3. | சக்தி ரோடு, ஆம்னி பேருந்து நிலையம் கட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 7,00,000/- | 87,600/- | - | - | 3,51,100/- |
| 4. | செட்டி வீதி கட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 7,00,000/- | 1,97,100/- | 4,66,600/- | - | 4,66,660/- |
| 5. | தியாகி குமரன் மார்க்கெட் கட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 12,00,000/- | 1,27,750/- | - | - | 6,21,555/- |
| 6. | உக்கடம் பேருந்து நிலையம் கட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம், | 14,00,000/- | 2,37,250/- | - | - | 7,20,000/- |
| 7. | வ.உ.சி.பார்க் கட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 5,00,000/- | 62,050/- | - | - | 3,06,000/- |

இதில் வரிசை எண் 1-ல் குறிப்பிட்டுள்ள காந்திபுரம் நகர பேருந்து நிலையத்தில், வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு திருமதி.N. ஸ்ரீதேவி என்பவர் மட்டும் கலந்து கொண்டு ரூ.5,30,000/- பொது ஏலம் மூலம் கோரியுள்ளார். மின் ஏலம் மற்றும் பொது ஏலத்தில் ஏலக்கோரிக்கை எதுவும் பெறப்படவில்லை. இது அரசு மதிப்பு தொகையை விட ரூ.800/- கூடுதலாக உள்ளது. இவ்வினம் தற்போது துறை மூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. தினசரி தோராயமாக ரூ.1,500/- வீதம் அதன்படி ஓராண்டுக்கு சராசரியாக ரூ.5,47,500/- வருமானம் வருகிறது.

வரிசை எண் 2-ல் குறிப்பிட்டுள்ள பி.என்.பாளையம் - கட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு திரு.K.சரத்குமார் என்பவர் உயர்ந்த பட்ச ஏல கேள்வியாக பொது ஏலம் மூலம் ரூ.2,01,000/- கோரியுள்ளார். இத்தொகையானது அரசு மதிப்பு தொகையை விட ரூ.1,49,000/- குறைவாக ஏலக்கோரிக்கை பெறப்பட்டுள்ளது. இவ்வினத்திற்கு கடந்த 2 ஆண்டுகளாக ஏலம் போகாமல் துறை மூலம் கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. நாள் ஒன்றுக்கு தோராயமாக ரூ.100/- வீதம் வசூல் செய்யப்படுகிறது. அதன்படி ஓராண்டுக்கு சராசரியாக ரூ.36,500/- வருமானம் வருகிறது. தற்போது கோரப்பட்டுள்ள உயர்ந்தபட்ச பொது ஏலத் தொகையான ரூ.2,01,000/- ஆனது துறை மூலம் வசூல் செய்யப்படும் தொகையை விட ரூ.1,64,500/- கூடுதலாகவும். அரசு மதிப்பை விட ரூ.1,49,000/- குறைவாகவும் உள்ளது.

வரிசை எண் 3-ல் குறிப்பிட்டுள்ள சக்தி ரோடு, ஆம்னி பேருந்து நிலையம் - கட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு திரு. K. ராஜு என்பவர் உயர்ந்த பட்ச ஏலக் கேள்வியாக ஒப்பந்தப்புள்ளி மூலம் ரூ.3,51,100/- அளித்துள்ளார். இத்தொகையானது அரசு மதிப்பு தொகையை விட ரூ.3,48,900/- குறைவாக ஏலக்கோரிக்கை பெறப்பட்டுள்ளது. இவ்வினத்திற்கு கடந்த 2 ஆண்டுகளாக ஏலம் போகாமல் துறை மூலம் கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. நாள் ஒன்றுக்கு தோராயமாக ரூ.240/- வீதம் வசூல் செய்யப்படுகிறது. அதன்படி ஓராண்டுக்கு சராசரியாக ரூ.87,600/- வருமானம் வருகிறது. தற்போது கோரப்பட்டுள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ.3,51,100/- ஆனது துறை மூலம் வசூல் செய்யப்படும் தொகையை விட ரூ.2,63,500/- கூடுதலாகவும். அரசு மதிப்பை விட ரூ.3,48,900/- குறைவாகவும் உள்ளது.

வரிசை எண் 4-ல் குறிப்பிட்டுள்ள செட்டி வீதி - கட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு திரு.M.திவாகர் என்பவர் உயர்ந்த பட்ச ஏலக் கேள்வியாக ஒப்பந்தப்புள்ளி மூலம் ரூ.4,66,660/- அளித்துள்ளார். இத்தொகையானது அரசு மதிப்பு தொகையை விட ரூ.2,33,340/- குறைவாக ஏலக்கோரிக்கை பெறப்பட்டுள்ளது. இவ்வினத்திற்கு நான்கு மாதங்களாக துறை மூலம் கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. நாள் ஒன்றுக்கு தோராயமாக ரூ.540/- வீதம் வசூல் செய்யப்படுகிறது. அதன்படி ஓராண்டுக்கு சராசரியாக ரூ.1,97,100/- வருமானம் வருகிறது. தற்போது கோரப்பட்டுள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ.4,66,600/- ஆனது துறை மூலம் வசூல் செய்யப்படும் தொகையை விட ரூ.2,69,560/- கூடுதலாகவும். அரசு மதிப்பை விட ரூ.2,33,340 குறைவாகவும் உள்ளது.

வரிசை எண் 5-ல் குறிப்பிட்டுள்ள தியாகி குமரன் மார்க்கெட் - கட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு திரு. S. மூர்த்தி என்பவர் உயர்ந்த பட்ச ஏலக் கேள்வியாக ஒப்பந்தப்புள்ளி மூலம் ரூ.6,21,555/- அளித்துள்ளார். இத்தொகையானது அரசு மதிப்பு தொகையை விட ரூ.5,78,445/- குறைவாக ஏலக்கோரிக்கை பெறப்பட்டுள்ளது. இவ்வினத்திற்கு கடந்த 2 ஆண்டுகளாக ஏலம் போகாமல் துறை மூலம் கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. நாள் ஒன்றுக்கு தோராயமாக ரூ.350/- வீதம் வசூல் செய்யப்படுகிறது. அதன்படி ஓராண்டுக்கு சராசரியாக ரூ.1,27,750/- வருமானம் வருகிறது. தற்போது கோரப்பட்டுள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ.6,21,555/- ஆனது துறை மூலம் வசூல் செய்யப்படும் தொகையை விட ரூ.4,93,805/- கூடுதலாகவும். அரசு மதிப்பை விட ரூ.5,78,445/- குறைவாகவும் உள்ளது.

வரிசை எண் 6-ல் குறிப்பிட்டுள்ள உக்கடம் பேருந்து நிலையம் - கட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு திரு. S. முகமது ரபீக் என்பவர் உயர்ந்த பட்ச ஏலக் கேள்வியாக ஒப்பந்தப்புள்ளி மூலம் ரூ.7,20,000/-அளித்துள்ளார். இத்தொகையானது அரசு மதிப்பு தொகையை விட ரூ.6,80,000/- குறைவாக ஏலக்கோரிக்கை பெறப்பட்டுள்ளது.

இவ்வினத்திற்கு கடந்த 2 ஆண்டுகளாக ஏலம் போகாமல் துறை மூலம் கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. நாள் ஒன்றுக்கு தோராயமாக ரூ.650/- வீதம் வசூல் செய்யப்படுகிறது. அதன்படி ஓராண்டுக்கு சராசரியாக ரூ.2,37,250/- வருமானம் வருகிறது. தற்போது கோரப்பட்டுள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ.7,20,000/- ஆனது துறை மூலம் வசூல் செய்யப்படும் தொகையை விட ரூ.4,82,750/- கூடுதலாகவும். அரசு மதிப்பை விட ரூ.6,80,000/- குறைவாகவும் உள்ளது.

வரிசை எண் 7-ல் குறிப்பிட்டுள்ள வ.உ.சி.பார்க் - கட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு திரு.C.செல்வம் என்பவர் உயர்ந்த பட்ச ஏலக் கேள்வியாக ஒப்பந்தப்புள்ளி மூலம் ரூ.3,06,000/- அளித்துள்ளார். இத்தொகையானது அரசு மதிப்பு தொகையை விட ரூ.1,94,000/- குறைவாக ஏலக்கோரிக்கை பெறப்பட்டுள்ளது. இவ்வினத்திற்கு 7.4.2022 முதல் துறை மூலம் கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. நாள் ஒன்றுக்கு தோராயமாக ரூ.170/- வீதம் வசூல் செய்யப்படுகிறது. அதன்படி ஓராண்டுக்கு சராசரியாக ரூ.62,050/- வருமானம் வருகிறது. தற்போது கோரப்பட்டுள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ.3,06,000/- ஆனது துறை மூலம் வசூல் செய்யப்படும் தொகையை விட ரூ.2,43,950/- கூடுதலாகவும். அரசு மதிப்பை விட ரூ.1,94,000/- குறைவாகவும் உள்ளது.

எனவே, வரிசை எண் 1-ல் குறிப்பிட்டுள்ள குத்தகை இனத்திற்கு துறை மூலம் வசூல் செய்யப்படும் தொகையினை விட குறைவாகவே ஏலக் கோரிக்கை பெறப்பட்டுள்ளது. வரிசை எண். 2 முதல் 7 வரை குறிப்பிட்டுள்ள குத்தகை இனங்களுக்கு துறை மூலம் வசூல் செய்யும் தொகையினை விட அதிகமாகவும் அரசு மதிப்பினை விட குறைவாகவும் தற்போது ஏல கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளது. இவ்வினங்கள் தொடர்ச்சியாக ஏலம் எதுவும் போகாமல் துறை மூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. துறை மூலம் வசூல் செய்ய பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியம், பராமரிப்பு செலவினங்கள் ஆகியவை கருத்தில் கொண்டும் வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டும் தற்போது கோரியுள்ள உச்சபட்ச ஏலக் கோரிக்கையினை ஏற்று ஒப்படைப்பு செய்வது தொடர்பாக வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டதில், வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுக்கூட்ட தீர்மான எண்.44, நாள்.18.7.2022 அலுவலக குறிப்பினை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மனிக்கப்பட்டது என தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.0117/2022/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 256 நாள் 29.08.2022</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 2

பொருள் - கோயம்புத்துார் மாநகராட்சி – விதிகள் - தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் விதிகள் 2022 (வார்டு குழு மற்றும் பகுதி சபா) - ஆணை வெளியிடப்பட்டது – மாமன்றத்தில் பதிவு செய்தல் - தொடர்பாக

பார்வை-

1) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 24470/2022/ MA2 நாள் 08.08.2022

2) அரசாணை (நிலை) எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 24.06.2022 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண் 358 நாள் 24.06.2022

3) அரசாணை (நிலை) எண் 93 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 24.06.2022

------------------

பார்வை 1-ல் காணும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 24-B-24-H மற்றும் மாநகராட்சிகள் சட்டம் பிரிவுகளின்படி, வார்டு குழு மற்றும் பகுதி சபா உருவாக்குவதற்கும் மற்றும் அதன் செயல்பாடுகளுக்கும் பார்வை 2-இல் காணும் அரசாணையின்படி உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், குழு செயலர் நியமிப்பது குறித்து பார்வை 3-இல் காணும் அரசாணையின்படி உத்திரவிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி இரண்டு அரசாணைகளின்படி உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

பார்வை 2 மற்றும் 3-இல் காணும் அரசாணைகளின்படி, வார்டு குழு (Ward Committee) மற்றும் பகுதி சபா (Area Sabha) அமைப்பது குறித்து விதிகள் வகுத்து உத்திரவிடப்பட்டுள்ளது.

மேற்காணும் அரசாணைகள் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - மாமன்றம் பதிவு செய்யலாம். ந.க.எண் 4453/2022/ எம்.சி. 8

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 257 நாள் 29.08.2022</u>**

பதிவு செய்யப்பட்டது

---

## பொருள் எண் 3

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு பகுதியில் தார் ஒட்டு போடுதல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 08.08.2022 அன்று பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில் | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | வடக்கு மண்டலம்– வார்டு எண். 15-க்குட்பட்ட என்.பி.சி நகர், கணேஷ் நகர், பாலசுப்ரமணியம் நகர், திருவள்ளுவர் நகர், கோவை கே.கே நகர், இ.பி காலனி ஆகிய பகுதிகளில் தார் ஒட்டு போடுதல். ந.க.எண்.2594/2022/எம்.டி.4 | 28.64 | ப.கு.தீ. எண்.6 நாள். 18.05.22 | இரண்டாம் அழைப்பு 26.07.2022 | 1).திரு.கே.சுந்தரம் மதிப்பீட்டை விட 17.02% அதிகம்<br><br>2) .திரு. ஆர்.ரத்தின வேலுசாமி மதிப்பீட்டை விட 0.35% **குறைவு** | திரு. ஆர்.ரத்தின வேலுசாமி மதிப்பீட்டை விட 0.35% **குறைவு** |

ஒப்பந்த புள்ளியினை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.2594/2022/எம்.டி.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 258 நாள் 29.08.2022</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 4

கோயம்புத்தூர் மாநகராட்சியில் கவுண்டம்பாளையம் பகுதியில் உள்ள பழைய குப்பைக் கிடங்கு வளாகத்தில் 2 மெகாவாட் கொள்ளளவுள்ள சூரிய மின்உற்பத்தி நிலையம் வடிவமைப்பு, கட்டுமானம், பொறியியல், உற்பத்தி, வழங்கல் இயக்கம் மற்றும் பராமரிப்பு (Design, Engineering, Manufacture, Supply, Erection, Testing and Commissioning) அமைக்கும் பணிக்கு ரூ.14.15 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள அரசாணை நிலை எண் 43, நநி&குவ நாள் 28.02.2019 அன்று நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி சேவைகள் கழகம், சென்னை (Tamilnadu Urban Flagship Investment Program (TNUFIP) Tranche 1 - ADB உதவியின் கீழ் இப்பணிக்கு நிலைத்தன்மை மானிய நிதி (Project sustainability Grant Fund (PSGF)) மூலம் 17.02.2021 அன்று ரூ.12.86 கோடிக்கு மானிய நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டது.

| வரிசை எண் | நிதி ஒதுக்கீடு விபரம் | தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | Grant from Project sustainability Grant Fund (PSGF) Under ADB assisted TNUFIP – T | 12.86 |
| 2 | ULB Contribution | 1.29 |
| | Total | 14.15 |

இப்பணிக்கு தலைமைப்பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம், சென்னை அவர்களால் 29.04.2022 அன்று தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இப்பணிக்கு 23.06.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்காணும் இரண்டு நிறுவனங்கள் கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கினர்.

1. திரு/ள். எஸ்பென் எண்டர்பிரைசஸ், கோயம்புத்தூர்.
2. திரு/ள். க்ரீன் ஃபீல்டு சோலார் சொல்யூசன்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.

மேற்குறிப்பிட்ட இரண்டு நிறுவனங்களும் வழங்கிய ஒப்பந்தப்புள்ளிகளை தொழில் நுட்ப கூராய்வு செய்யப்பட்டதில் இரண்டு நிறுவனங்களும் தொழில் நுட்ப தகுதி பெற்றதை தொடர்ந்து Asian Development Bankக்கு அனுப்பப்பட்டு **15.07.2022** அன்று ஒப்புதல் பெறப்பட்டது.

இதனைத் தொடர்ந்து திரு/ள். எஸ்பென் எண்டர்பிரைசஸ், கோயம்புத்தூர் மற்றும் திரு/ள். க்ரீன் ஃபீல்டு சோலார் சொல்யூசன்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்த விலைப்புள்ளிகள் **21.07.2022** அன்று திறக்கப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

2 MW சூரிய மின்உற்பத்தி நிலையம் நிறுவும் பணிகள்

| வரிசை எண் | பணியின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்ததாரர் கோரிய தொகை | ஒப்பந்தப்புள்ளி ஏற்கும் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | Design, Engineering, Manufacture, Supply, Erection, Testing and Commissioning of 2MW$_{ac}$ Grid interactive Solar PV Power Plant with associated HT overhead transmission line / underground cable upto the point of interconnection at Old Compost Yard Kavundampalayam in Coimbatore Corporation. | ரூ. 12,51,81,000/– | திரு/ள். க்ரீன் ஃபீல்டு சோலார் சொல்யூசன்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை. | ரூ. 14,01,24,000/– (ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகைக்கு 11.94 சதவீதம் கூடுதல்) | **ஏற்கப்படவில்லை** |
| | | | திரு/ள். எஸ்பென் எண்டர்பிரைசஸ், கோயம்புத்தூர். | ரூ. 13,71,98,600/– (ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகைக்கு 9.60 சதவீதம் கூடுதல்) | **ஏற்கப்பட்டது** ரூ. 13,71,98,600/– |

2 MW சூரிய மின்உற்பத்தி நிலையம் **இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள்- ஐந்து வருடங்கள்**

| வரிசை எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்ததாரர் கோரிய தொகை | ஒப்பந்தப்புள்ளி ஏற்கும் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | Operation and Maintenance of 2MW Solar Power Plant at Kavundampalayam **for Five years** | ரூ. 1,27,03,839/– | திரு/ள். க்ரீன் ஃபீல்டு சோலார் சொல்யூசன்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை. | ரூ. 1,51,66,034/– (மதிப்பீட்டுத் தொகைக்கு 19.38 சதவீதம் கூடுதல்) | **ஏற்கப்படவில்லை** |
| | | | திரு/ள். எஸ்பென் எண்டர்பிரைசஸ், கோயம்புத்தூர். | ரூ. 1,42,82,011/– (மதிப்பீட்டுத் தொகைக்கு 12.42 சதவீதம் கூடுதல்) | **ஏற்கப்பட்டது** ரூ. 1,42,82,011/– |

மேற்குறிப்பிட்ட இரண்டு நிறுவனங்களும் வழங்கிய விலைப்புள்ளிகளை கூராய்வு செய்யப்பட்டு, Asian Development Bankக்கு அனுப்பப்பட்டது.

இப்பணிக்கு குறைந்த ஒப்பந்த விலைப்புள்ளி வழங்கிய திரு/ள். எஸ்பென் எண்டர்பிரைசஸ், கோயம்புத்தூர் என்ற நிறுவனம் சூரிய மின்உற்பத்தி நிலையம் நிறுவும் பணிக்கு ரூ. **13,71,98,600/–** மற்றும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கு (ஐந்து (5) வருடம்) ரூ. **1,42,82,011/–** மேற்கொள்ள Asian Development Bank **03.08.2022**ல் ஒப்புதல் வழங்கியது.

மேற்படி பணிக்கு இறுதியாக Asian Development Bank மூலம் ஒப்புதல் வழங்கப்பட்ட விலைப்புள்ளி தொகை ரூ. **13,71,98,600/–** (ரூபாய் பதிமூன்று கோடியே எழுபத்து ஒரு இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து அறுநூறு மட்டும்) மற்றும் ஐந்து வருட கால இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிக்ககான தொகை ரூ. **1,42,82,011/–** (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து இரண்டு இலட்சத்து எண்பத்திரண்டாயிரத்து பதினொன்று மட்டும்) ஆகியவற்றை ஏற்பது குறித்து **"மாநில ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவின்"** முடிவிற்கான முன்மொழிவுகள் அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

அ) மேற்கண்ட பணிக்கு தி/ள். எஸ்பென் எண்டர்பிரைசஸ், கோயம்புத்தூர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. **13,71,98,600/–** (மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட **9.60%** சதவீதம் கூடுதல்) மற்றும் ஐந்து வருட கால இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிக்ககான தொகை ரூ. **1,42,82,011/–**ஆகியவற்றை **"மாநில ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு"** வின் பரிசீலனைக்கு அனுப்பவும், குழு மேற்கொள்ளும் முடிவினை ஏற்கவும் முன்அனுமதி வேண்டி அனுப்பியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு கூடுதலான விலை விகிதத்தில் வழங்கப்பட்டுள்ள (மதிப்பீட்டிற்கு **9.60%** கூடுதல்) மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பதால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்தும், இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிக்கான செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்தும் மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். 5180 /2019 /ஜே,என் 4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 259 நாள் 29.08.2022**

அ) அனுமதிக்கப்பட்டது

ஆ) ஒப்புதல் வழங்கப்பட்டது

---

## பொருள் எண் 5

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் வெள்ளலூர் குப்பை கிடங்கிற்கு காவலர்கள் நியமிக்கும் பணிக்காக தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (Texco) மூலமாக இராணுவத்தில் பணி ஓய்வுபெற்ற காவலர்கள் நியமிக்கும் பணி மேற்கொள்ள மதிப்பீடு ரூபாய் 51.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்திற்கு (Texco) பணி ஆணை வழங்க மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் 1756/2022/ எம்.டி. 4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 260 நாள் 29.08.2022**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 6

| | |
|---|---|
| பொருள் : | கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது சுகாதாரப்பிரிவு தூய்மைப் பணியாளார்கள் 135 நபர்கள் 30.06.2022 அன்று ஓய்வு பெற்றது –ஒப்பந்த தூய்மைப் பணியாளர்கள் நியமிக்க அனுமதி கோருதல் -தொடர்பாக. |

------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் ஐந்து மண்டலங்களில் நிரந்தர தூய்மைப் பணியாளர்களாக பணியில் இருந்து கீழ்க்கண்ட பட்டியலில் தெரிவித்துள்ளபடி 135 நபர்கள் 30.06.2022(AN) முதல் ஓய்வில் (Retirement) சென்று விட்டனர்.

| வ.எண் | மண்டலம் | வா.எண் | ஓய்வுப்பெற்ற நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை | கூடுதலாக ஒப்பந்ததாரார் மூலம் நியமிக்க வேண்டிய எண்ணிக்கை | ஒப்பந்த பணி மேற்கொள்ளும் நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1. | தெற்கு | 77 | 1 | 1 | திரு. விஜயகுமார் |
| 2. | | 78 | 1 | 1 | |
| 3. | | 86 | 4 | 4 | |
| 4. | | 99 | 1 | 1 | திரு.P.இளங்கோ |
| **மொத்தம்** | | | **7** | **7** | |
| 5. | மத்தியம் | 31 | 3 | 3 | மெட்ராஸ் இன்.ஃ.பரா |
| 6. | | 32 | 1 | 1 | |
| 7. | | 46 | 3 | 3 | மெட்ராஸ் இன்.ஃ.பரா |
| 8. | | 47 | 3 | 3 | |
| 9. | | 48 | 6 | 6 | |
| 10 | | 49 | 1 | 1 | நந்தகோபால் |
| 11. | | 63 | 3 | 3 | மெட்ராஸ் இன்.ஃ.பரா |
| 12. | | 64 | 1 | 1 | மெட்ராஸ் இன்.ஃ.பரா |
| 13. | | 66 | 3 | 3 | என்.எம்.எஸ். |
| 14. | | 67 | 9 | 9 | நந்தகோபால் |
| 15. | | 68 | 2 | 2 | ராம்ராஜ் |
| 16. | | 69 | 5 | 5 | ஆர்.ஆர்.எண்டர் பிரைசஸ் |
| 17. | | 70 | 7 | 7 | எஸ். ராஜு |
| 18. | | 80 | 5 | 5 | என்.எம்.எஸ். இஞ்ஜினியர்ஸ் |
| 19. | | 81 | 6 | 6 | |
| 20. | | 82 | 7 | 7 | |
| 21. | | 83 | 8 | 8 | |
| **மொத்தம்** | | | **73** | **73** | |
| 22. | கிழக்கு | 24(37) | 3 | 3 | பிரிந்தாவன் ஏஜென்ஸி |
| 23. | | 50 | 1 | 1 | ஓசூர் பில்டர்ஸ் |
| 24. | | 51 | 1 | 1 | |
| 25. | | 52 | 2 | 2 | |
| 26. | | 54 | 1 | 1 | |
| 27. | | 56 | 1 | 1 | |
| 28. | | 59 | 3 | 3 | |
| 29. | | 60 | 2 | 2 | |
| 30. | | 61 | 1 | 1 | |
| 31. | | 53 | 2 | 2 | |
| 32. | | 57 | 1 | 1 | |
| | **மொத்தம்** | | **18** | **18** | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 33 | மேற்கு | 38 | 1 | 1 | ஆர்.ஆர்.எண்டர் பிரைசஸ் |
| 34. | | 41 | 1 | 1 | |
| 35. | | 71 | 1 | 1 | |
| 36. | | 72 | 8 | 8 | |
| 37. | | 45 | 4 | 4 | நந்தகோபால் |
| 38 | | 43 | 2 | 2 | ராம்ராஜ் |
| 39. | | 44 | 5 | 5 | |
| 40. | | 73 | 2 | 2 | PAT எண்டர்பிரைசஸ் |
| 41. | | 75 | 2 | 2 | கோவிந்தராஜ் |
| | **மொத்தம்** | | **26** | **26** | |
| 42. | வடக்கு | 13 | 1 | 1 | நந்தகோபால் |
| 43. | | 19 | 3 | 3 | |
| 44. | | 26 | 3 | 3 | |
| 45. | | 28 | 1 | 1 | |
| 46. | | 18 | 3 | 3 | மெட்ராஸ் இன்.்.பரா |
| | **மொத்தம்** | | **11** | **11** | |
| **Grand Total - 7+73+18+26+11=135 நபர்கள்** | | | | | |

எனவே மேற்படி 135 தூய்மைப் பணியாளர்கள் காலிப் பணியிடங்களை ஏற்கனவே அந்தந்த மண்டலங்களின் எதிரே குறிப்பிட்டுள்ள ஒப்பந்த தூய்மைப் பணியாளர்களை வழங்கி வரும் ஒப்பந்ததார்கள் மூலம் அதே விலை அடிப்படையில் அந்தந்த மண்டலங்களின் வார்டுகளில் பணியமர்த்தம் செய்யவும் அதனால் ஏற்படும் உத்தேச கூடுதல் செலவினம் ரூ.66,82,500/- ஐ (135 Pers x Rs.550 x 90 days Including ESI /EPF, Service charges ) (Basic Wage of Rs.445/-) மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதி க்கலாம். ந.க.எண். 8771 /2021/ எம். இ.4(எம்இ3)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 261 நாள் 29.08.2022</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 7**

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு பகுதிகளிலுள்ள பழுதடைந்துள்ள சாலைகளுக்கு தார் ஒட்டு போடுதல் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு **12.07.2022** மற்றும் **22.07.2022** ஆகிய தேதிகளில் பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எ ண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில் | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | மத்திய மண்டலம் – வார்டு எண் 62 மற்றும் 63 -க்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்துள்ள சாலைகளுக்கு தார்ஓட்டுப் போடுதல் (ந.க.எண். 2789/2022/எம்.டி.5) | 3.30 | ம.தீ.எண். 143 நாள். 26.05.22 | இரண்டாம் அழைப்பு 19.07.22 | 1).திரு.எஸ். விஜயகுமார் மதிப்பீட்டைவிட 0.11 % குறைவு | திரு.எஸ். விஜயகுமார் மதிப்பீட்டைவிட 0.11 %குறைவு |
| 2 | மத்திய மண்டலம் – வார்டு எண் 49க்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்துள்ள சாலைகளுக்கு தார்ஓட்டுப் போடுதல் (ந.க.எண். 2788/2022/எம்.டி.5) | 8.40 | ம.தீ.எண். 143 நாள். 26.05.22 | இரண்டாம் அழைப்பு 19.07.22 | 1).தி/ள். சித்ரவர்சினி அன் கோ மதிப்பீட்டைவிட 0.25 % குறைவு<br><br>2).திரு.ஜி. அருள்குமரன் மதிப்பீட்டைவிட 0.16 % அதிகம் | தி/ள். சித்ரவர்சினி அன் கோ மதிப்பீட்டைவிட 0.25 % குறைவு |
| 3 | மத்திய மண்டலம் – வார்டு எண் 81க்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்துள்ள சாலைகளுக்கு தார்ஓட்டுப் போடுதல் (ந.க.எண். 2797/2022/எம்.டி.5) | 9.90 | ம.தீ.எண். 142 நாள். 26.05.22 | இரண்டாம் அழைப்பு 19.07.22 | 1).திரு.எஸ்.ரத்தின வேலுசாமி மதிப்பீட்டைவிட 0.29 % குறைவு<br><br>2).திரு.ஜி. அருள்குமரன் மதிப்பீட்டைவிட 0.15% அதிகம்<br><br>3).தி/ள். சித்ரவர்சினி அன் கோ மதிப்பீட்டைவிட 0.06%குறைவு | திரு.எஸ்.ரத்தின வேலுசாமி மதிப்பீட்டைவிட 0.29% குறைவு |
| 4 | மத்திய மண்டலம் – வார்டு எண் 47க்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்துள்ள சாலைகளுக்கு தார்ஓட்டுப் போடுதல் (ந.க.எண். 2824/2022/எம்.டி.5) | 7.00 | ம.தீ.எண். 143 நாள். 26.05.22 | இரண்டாம் அழைப்பு 19.07.22 | 1).தி/ள். சித்ரவர்சினி அன் கோ மதிப்பீட்டைவிட 0.25%குறைவு | தி/ள். சித்ரவர்சினி அன் கோ மதிப்பீட்டைவிட 0.25%குறைவு |
| 5 | மத்திய மண்டலம் – வார்டு எண் 46க்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்துள்ள சாலைகளுக்கு தார்ஓட்டுப் போடுதல் (ந.க.எண். 2786/2022/எம்.டி.5) | 6.00 | ம.தீ.எண். 143 நாள். 26.05.22 | இரண்டாம் அழைப்பு 19.07.22 | 1).தி/ள்.வெற்றி கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டைவிட 4.85%அதிகம்<br>2).தி/ள்.விஷ்ணு இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் 4.29%குறைவு | தி/ள்.விஷ்ணு இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் 4.29% குறைவு |
| 6 | மத்திய மண்டலம் – வார்டு எண் 32க்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்துள்ள சாலைகளுக்கு தார்ஓட்டுப் போடுதல் (ந.க.எண். 2785/2022/எம்.டி.5) | 7.20 | ம.தீ.எண். 143 நாள். 26.05.22 | இரண்டாம் அழைப்பு 19.07.22 | 1).தி/ள்.வெற்றி கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டைவிட 4.85%அதிகம்<br>2).தி/ள்.விஷ்ணு இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் 4.67% குறைவு | தி/ள்.விஷ்ணு இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் 4.67% குறைவு |
| 7 | மத்திய மண்டலம் – வார்டு எண் 31க்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்துள்ள சாலைகளுக்கு தார்ஓட்டுப் போடுதல் (ந.க.எண். 2784/2022/எம்.டி.5) | 5.70 | ம.தீ.எண். 143 நாள். 26.05.22 | முதலாம் அழைப்பு 28.06.22 | 1).தி/ள்.விஷ்ணு இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் 4.45% குறைவு<br>2) திரு.எஸ். விஜயகுமார் மதிப்பீட்டைவிட 2.44%குறைவு<br>3). திரு. எம்.தண்டபாணி மதிப்பீட்டைவிட 1.23% குறைவு | தி/ள்.விஷ்ணு இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் 4.45%குறைவு |
| | மொத்தம் | 47.50 | | | | |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளின் ஒப்பந்த புள்ளிகளை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதி க்கலாம். ந.க.எண். 2789 /2022/ எம்.டி.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 262 நாள் 29.08.2022**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 8

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு, வடக்கு மற்றும் மத்திய மண்டலங்களுக்குட்பட்ட வார்டு பகுதிகளிலுள்ள மாநகராட்சி ஆரம்பப்பள்ளி, நடுநிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் கழிப்பிடம் கட்டுதல் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு நாள்.22.07.2022 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எ ண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில் | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| | ஆரம்பக்கல்வி நிதி –2022–2023 | | | | | |
| 1 | மத்திய மண்டலம் வார்டு எண்.80–க்குட்பட்ட செல்வபுரம் மேல்நிலை பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல்.<br>ந.க.எண்.2732/2022/எம்.டி.5 | 68.00 | ம.தீ. எண். 104 நாள். 26.05.22 | இரண்டாம் அழைப்பு 19.07.2022 | 1).திரு. என். குருவாயூரப்பன் மதிப்பீட்டை விட 1.10% குறைவு<br><br>2).தி/ள்.பிரடி எண்டர்பிரைசஸ் மதிப்பீட்டை விட 1.90% அதிகம் | திரு. என். குருவாயூரப்பன் மதிப்பீட்டை விட 1.10% குறைவு |
| 2 | மத்திய மண்டலம் வார்டு எண்.82–க்குட்பட்ட கோட்டை பகுதியிலுள்ள மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல்.<br>ந.க.எண்.2736/2022/எம்.டி.5 | 70.00 | ம.தீ. எண். 104 நாள். 26.05.22 | இரண்டாம் அழைப்பு 19.07.2022 | 1).திரு. கே.கோவிந்தராஜ் மதிப்பீட்டை விட 0.07% குறைவு<br><br>2).தி/ள்.ஆர்.ஆர். எண்டர்பிரைசஸ் மதிப்பீட்டை விட 1.11% அதிகம் | திரு. கே.கோவிந்தராஜ் மதிப்பீட்டை விட 0.07% குறைவு |
| 3 | வடக்கு மண்டலம் வார்டு எண்.19–க்குட்பட்ட மணியகாரம்பாளையம் மேல்நிலை பள்ளியில் வகுப்பறைகள் மற்றும் கழிப்பிடம் கட்டுதல்<br>ந.க.எண்.1953/2022/எம்.டி.5 | 99.10 | ம.தீ. எண். 104 நாள். 26.05.22 | இரண்டாம் அழைப்பு 19.07.2022 | 1).திரு. ஆர்.செல்வராஜ் (தில்லை நகர்) மதிப்பீட்டை விட 0.93% குறைவு<br><br>2).திரு.ஆர். தங்கவேல் மதிப்பீட்டை விட 0.11% குறைவு<br><br>2).தி/ள்.பிரடி எண்டர்பிரைசஸ் மதிப்பீட்டை விட 0.31% அதிகம்<br><br>4).திரு.என். குருவாயூரப்பன் மதிப்பீட்டை விட 2.09% குறைவு | திரு.என். குருவாயூரப்பன் மதிப்பீட்டை விட 2.09% குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | மேற்கு மண்டலம் வார்டு எண்.38–க்குட்பட்ட சிக்கராயபுரம் மாநகராட்சி ஆரம்பப்பள்ளி வளாகத்தில் புதிய வகுப்பறை கட்டிடம் மற்றும் மாணவ, மாணவியர்க்கான கழிப்பிடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுதல் ந.க.எண்.2739/2022/எம்.டி.5 | 37.00 | ம.தீ. எண். 104 நாள். 26.05.22 | இரண்டாம் அழைப்பு 19.07.2022 | 1).தி/ள். இன்டெலக்ட் டெக்னாலஜீஸ் மதிப்பீட்டை விட 0.02% குறைவு<br><br>2).திரு.சி. ஆனந்தகுமார் மதிப்பீட்டுத் தொகை | தி/ள். இன்டெலக்ட் டெக்னாலஜீஸ் மதிப்பீட்டை விட 0.02% குறைவு |
| 5 | மேற்கு மண்டலம் வார்டு எண்.37–க்குட்பட்ட மருதாபுரம் பகுதியிலுள்ள மாநகராட்சி ஆரம்பப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டுதல் ந.க.எண்.2737/2022/எம்.டி.5 | 31.50 | ம.தீ. எண். 104 நாள். 26.05.22 | இரண்டாம் அழைப்பு 19.07.2022 | 1).திரு.என். குருவாயூரப்பன் மதிப்பீட்டை விட 0.34% குறைவு<br><br>2). தி/ள்.பிரடி எண்டர்பிரைசஸ் மதிப்பீட்டை விட 0.24% அதிகம் | திரு.என். குருவாயூரப்பன் மதிப்பீட்டை விட 0.34% குறைவு |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளின் ஒப்பந்த புள்ளிகளை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதி க்கலாம். ந.க.எண். 2732 /2022/ எம்.டி.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 263 நாள் 29.08.2022**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 9

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - வ.உ.சி.பூங்கா அவினாசி சாலை மைதானம் - பொருட்காட்சி நிகழ்ச்சிக்கு பொது ஏலம் / மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு வழங்குவது – தொடர்பாக.

பார்வை :
1. ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.20.08.2022.
2. பொதுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நாள்.25.08.2022.

************

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்.83 அவினாசி சாலை வ.ஊ.சி.பூங்கா மைதானம் ஒப்படை செய்யும் நாள் முதல் 60 நாட்களுக்கு நடத்திக்கொள்ளும் உரிமத்திற்கு பொது ஏலம் / மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 25.08.2022 தேதியன்று மத்திய மண்டல அலுவலகத்தில் கோரப்பட்டது. இதில் கீழ்கண்ட ஏலதாரர்கள் கலந்து கொண்டு உச்சபட்ச தொகையாக பொது ஏலம் மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் கோரியுள்ளனர்.

| வ. எண் | ஏலதாரா்கள் பெயா் விவரம் | ஒப்பந்தப் புள்ளி ரூ | மின்ஏலம் ரூ. | பொது ஏலம் மூலம் கோரிய உயா்ந்தபட்ச கேள்வித் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| | | நாள் ஒன்றுக்கு | நாள் ஒன்றுக்கு | நாள் ஒன்றுக்கு |
| 1 | திரு.மு.சந்திரசேகா், | 1,81,000/- | கோரிக்கை ஏதும் பெறப்படவில்லை | 1,27,000/- |
| 2 | ரேயன் டிரேடா்ஸ், | 1,21,000/- | ” | 1,45,000/- |
| 3 | திரு.L.பிரகாஷ் | 1,81,600/- | ” | 2,23,500/- |
| 4 | ஆா். முகம்மது ர.ஃபி, சக்ஸஸ் மீடியா, | 90,000/- | ” | 1,20,000/- |
| 5 | திரு.ஆ.முகம்மதுஇஸ்மாயில், மணாஸ் எண்டா்டெய்ண்மெண்ட, | 1,78,000/- | 1,10,000/- | கோரிக்கை ஏதும் பெறப்படவில்லை |
| 6 | திரு.A.மணி ஓம்சக்தி எண்டா்டெய்ண்மெண்ட்ஸ், | 1,80,005/- | கோரிக்கை ஏதும் பெறப்படவில்லை | **2,24,000/-** |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | ஆர்.ராஜா, ராஜா எண்டர்டெய்ண்மெண்ட், | 1,20,000/- | ” | 1,86,000/- |
| 8 | K.ராஜேந்திரன், ஸ்ரீசாய் அம்யூஸ்மெண்ட்ஸ், | 1,10,000/- | ” | 1,60,000/- |
| 9 | மூர்த்தி, | கோரிக்கை ஏதும் பெறப்பட வில்லை | கோரிக்கை ஏதும் பெறப்படவில்லை | கோரிக்கை ஏதும் பெறப்படவில்லை |
| 10 | ஜாவித், | 1,51,000/- | ” | 2,20,000/- |
| 11 | G.பிரபு, | 1,77,000/- | ” | 1,66,000/- |

மேற்படி பொது ஏலம் / மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட 11 நபர்களில் திரு.A.மணி, ஓம்சக்தி எண்டர்டெய்ண்மெண்ட்ஸ், நிறுவனத்தார் நாளொன்றுக்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகையாக ரூ.2,24,000/-க்கு கேட்கப்பட்டுள்ளது. நாள் ஒன்றுக்கு அரசு மதிப்பு ரூ.75000/- ஆகும். அரசு மதிப்பை விட தற்போது ரூ.149000/- கூடுதலாக கோரப்பட்டுள்ளது. அதன்படி வ.ஊ.சி.பூங்கா மைதானத்தில் ஒப்படைக்கும் நாள் முதல் 60 நாட்களுக்குப் பொருட்காட்சி நடத்த செலுத்த வேண்டிய தொகை கீழ்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| மைதான வாடகைத் தொகை (224000 x 60) | : | ரூ. 1,34,40,000/- |
| GST 18% | : | ரூ. 24,19,200/- |
| வைப்புத் தொகை 4018 (33,60,000-500000) | : | ரூ. 28,60,000/- |
| வாகன நிறுத்தக்கட்டணம் (3500 x 60) | : | ரூ. 2,10,000/- |
| GST 18% | : | ரூ. 37,800/- |
| குப்பைகள் அகற்றும் கட்டணம்(1200 x 60) | : | ரூ. 72,000/- |
| மொத்தம் | : | ரூ. 1,90,39,000/- |

எனவே, நாள் ஒன்றுக்கு அதிக பட்ச வாடகைத் தொகையாக ரூ.2,24,000/- க்கு ஏலம் கோரிய திரு.A.மணி, ஓம்சக்தி எண்டர்டெய்ண்மெண்ட்ஸ், என்பவரது கேள்வித்தொகையை ஏற்று வ.உ.சி.பூங்கா மைதானத்தில் ஒப்படைக்கும் நாள் முதல் 60 நாட்களுக்கு பொருட்காட்சி நடத்திக்கொள்ளும் உரிமம் ஒப்படை செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 4089/2021/அ7(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 264 நாள் 29.08.2022</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண்: 10**

கோயம்புத்தூர் மாநகராட்சி, ஐந்து மண்டலங்களுக்குட்பட்ட வார்டு பகுதிகளில், **ஆரம்பப் பள்ளி கல்வி நிதி 2022–2023–ன் கீழ்** மாநகராட்சி ஆரம்பப்பள்ளி, நடுநிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு நாள் **22.08.2022** அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எ ண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில் | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| **1** | வடக்கு மண்டலம் வார்டு எண்.**18**–க்குட்பட்ட ராமசாமி நகர் பகுதியிலுள்ள மாநகராட்சி உயர் நிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல். | **90.00** | ம.தீ.எண். **104** நாள். **26.05.22** | முதலாம் அழைப்பு **30.06.22** | **1)**.தி/ள்.ஏ.பி.ஆர் கன்ஸ்ட்ரக்சன் மதிப்பீட்டை விட **0.01%** அதிகம் | **3)**.திரு, எஸ்.ராஜூ மதிப்பீட்டை விட **0.01%** குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | ந.க.எண்.2730/2022/எம்.டி.5 | | | | 2).தி/ள்.ஒசூர் பில்டர்ஸ் மதிப்பீட்டை விட 10.51% அதிகம்<br><br>3).திரு, எஸ்.ராஜு மதிப்பீட்டை விட 0.01% குறைவு | |
| 2 | மத்திய மண்டலம் வார்டு எண்.32–க்குட்பட்ட சங்கனூர் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் இரண்டாம் தளத்தில் கூடுதலாக 7 வகுப்பறைகள் கட்டுதல்.<br>ந.க.எண்.2731/2022/எம்.டி.5 | 91.00 | ம.தீ. எண். 104 நாள். 26.05.22 | முதலாம் அழைப்பு 30.06.22 | 1).திரு. ஆர்.செல்வராஜ் மதிப்பீட்டை விட 1.16% குறைவு<br><br>2).தி/ள்.கே.சி.பி இன்ப்ரா லிட் மதிப்பீட்டை விட 10.07% அதிகம்<br><br>3).திரு. ஆர்.தங்கவேல் மதிப்பீட்டை விட 0.30% குறைவு | திரு. ஆர்.செல்வராஜ் மதிப்பீட்டை விட 1.16% குறைவு |
| 3 | மேற்கு மண்டலம் வார்டு எண்.16–க்குட்பட்ட எம்.ஜி.ஆர் நகர் பகுதியிலுள்ள மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் புதிய வகுப்பறை கட்டுதல்.<br>ந.க.எண்.2738/2022/எம்.டி.5 | 74.95 | ம.தீ. எண். 104 நாள். 26.05.22 | முதலாம் அழைப்பு 30.06.22 | 1).திரு. ஆர்.தங்கவேல் மதிப்பீட்டை விட 0.25% குறைவு<br><br>2).திரு. கே.கோவிந்தராஜ் மதிப்பீட்டை விட 0.32% அதிகம்<br><br>3).தி/ள்மெட்ராஸ் இன்ப்ரா மதிப்பீட்டை விட 10.41% அதிகம்<br><br>4).திரு. ஆர்.செல்வராஜ் (தில்லை நகர்) மதிப்பீட்டை விட 0.76% குறைவு | திரு. ஆர்.செல்வராஜ் (தில்லை நகர்) மதிப்பீட்டை விட 0.76% குறைவு |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளின் ஒப்பந்த புள்ளிகளை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.2730/2022/எம்.டி.5 அலுவலகக்குறிப்பு: **அனுமதிக்கலாம்**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 265 நாள் 29.08.2022**

அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) ஆ. கல்பனா
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி